DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : DVC.No.9/2023 | Deposition of Witness for : PW1 |
| Name : சிந்தியா | Father/Husband Name : |
| Age : | Village : |
| Taluk : | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21 November 2025.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1. திருமணம் எனக்கு எங்கு வைத்து நடைபெற்றது என்றால் சாத்தான்குளம் மரியாவின் மாசற்ற திருஇருதய ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. திருமணத்தின்போது நகை, ரொக்கம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 111 1/2 சவரன் நகை, ரொக்கமாக 5 லட்சம், சீர்வரிசைப் பொருட்கள் கட்டில், மெத்தை, பீரோ, மிக்சி, கிரைண்டர் சமையல் பாத்திரங்கள், குத்துவிளக்கு, AC ஆகியவை எனக்கு சீர்வரிசையாக கொடுத்தார்கள். நகை, பணம் போன்ற சீர்வரிசைப் பொருட்கள் தற்போது யாரிடம் உள்ளது என்றால் எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளது.

2. என்னுடைய திருமண பேச்சுவார்த்தை யார் மூலமாக நடைபெற்றது என்றால் 1,2,3 எதிர்மனுதாரர்கள் வந்தார்கள், அவர்களோடு கார்லோஸ் ஆசிரியர் என்பவர் வந்தார், அவர் எனது கணவருடைய மாமா ஆவார். திருமணம் செய்தபோது 1ஆவது எதிர்மனுதாரர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் Phoenix என்ற பெயரில் மொபைல் Sales and Sevice கடை வைத்து நடத்தி வந்தார், கேபிள் தொழில் செய்து வந்தார், Engineering படித்துள்ளார், தோட்டம் இடம் உள்ளது என என்னிடம் கூறினார்கள் ஆனால் அவர் Engineering படிக்கவில்லை என்பது திருமணம் முடிந்த பிறகு தான் தெரியும். கடை சொந்த கடையா அல்லது வாடகை கடையா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, கடை வைத்திருந்ததாக சொன்னார்கள். திருமணத்தின்போது 1ஆவது எதிர்மனுதாரருக்கு மாத வருமானம் எவ்வளவு எனக் கூறினார்கள் என்றால் ரூ.1,50,000/- என கூறினார்கள். திருமணத்திற்கு பிறகு நாங்கள் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

3. திருமணத்திற்கு பிறது 1ஆவது எதிர்மனுதாரர் என்னை வெளியே எங்காவது அழைத்து சென்றாரா என்றால் அவர் என்னை அழைத்துச் செல்லவில்லை, அவர் திருமணம் முடிந்த பிறகு எந்த ஈடுபாடும் இல்லாமல் இருந்தார், நான் அவரை வெளியில் அழைத்துச் சென்றேன். திருமணம் முடிந்த பிறகு குடும்ப பெண்ணிற்குரிய வேலைகளான சமையல் போன்ற வேலைகளை செய்து வந்தேனா என்றால் செய்து வந்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Tech Bio Technology படித்துள்ளேன், நான் ஏதேனும் வேலை செய்து வந்தேனா என்றால் இல்லை.

4. திருமணம் முடிந்த பிறது என்னுடைய நகைகளை திருட்டு பயம் இருப்பதாக சொல்லி யாரிடம் கொடுத்து வைத்திருந்தேன் என்றால் 3 ஆம் எதிர்மனுதாரர் சரோஜா என்பவரிடம் கொடுத்து வைத்திருந்தேன். 2,3 எதிர்மனுதாரர்கள் என்னை என்ன சொல்லி திட்டினார்கள் என்றால் எனக்கு வீட்டு வேலைகள் எதுவும் செய்ய தெரியவில்லை, வெறும் படிப்பை மட்டும வைத்து இவள் என்ன செய்வாள் என்று


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.11.21 15:24:41 +0530

தேவடியா மகளே என்று ஆபாசமாக திட்டி 2,3 எதிர்மனுதாரர்கள் 1 ஆவது எதிர்மனுதாரரை தூண்டிவிடுவார்கள்.

5. என்னுடைய கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. அவர் மதுஅருந்துவிட்டு வரும் போது நான் 10 லட்சம் கேட்டு மிரட்டினேன் என்றால் அவர் தான் என்னுடைய தொழில் விரிவாக்கத்திற்ககாக ரூ.10 லட்சம் வேண்டும் என்று மதுஅருந்துவிட்டு என்னிடம் கேட்டு தகராறு செய்தார். 1,2,3 எதிர்மனுதாரர்கள் என்னிடம் நகை, பணம் கேட்டு மிரட்டியதால் தான் நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் அவர்கள் என்னை அடித்து விரட்டினார்கள், அதனால் தான் நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றேன், பின்பு 1 மாதத்தில் என்னுடைய பெற்றோர் சமாதானம் பேசி எதிர்மனுதாரர் வீட்டில் கொண்டு வந்துவிட்டார்கள். 1,2,3 எதிர்மனுதாரர் வீட்டில் திருட்டு சம்பவம் நடைபெற்றதாக யாராவது என்னிடம் கூறியுள்ளனரா என்றால் என்னுடைய மாமியார் மேல் வீட்டில் ஒரு மாதத்திற்கு முன்பாக அப்போது திருட்டு சம்பவம் நடைபெற்றதாக கூறினார்கள்.

6. நான் என்னுடைய தம்பியின் மருத்துவ படிப்பிற்காக 1 ஆவது எதிர்மனுதாரிடம் பணம் கேட்டேனா என்றால் இல்லை. 3 ஆவது எதிர்மனுதாரரின் 45 பவுன் நகையை 1 ஆவது எதிர்மனுதாரரிடம் நான் கேட்டதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை எதிர்மனுதாருடைய வீட்டில் வாழ்ந்து வந்தேன் என்றால் 2022 பிப்ரவரி மாதம் பிரச்சனை ஏற்பட்டதால் என்னுடைய வீட்டிற்கு பிள்ளைகளுடன் வந்தேன். என்னுடைய தகப்பனாருக்கு Dove International School க்கு வெளிநாட்டில் இருந்து பணம் வருமா என்றால் இல்லை. Dove International School என்னுடைய தகப்பனாரின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, அது தனிநபர் நடத்த இயலாது, தற்போது நடைபெறவில்லை. என்னுடைய தம்பிக்கு மருத்துவ படிப்பு படிக்க பணம் இல்லை என்பதால் வரதட்சணைக்காக ஒரு பெண்ணை திருமணம் செய்து அவரை கொடுமைப்படுத்தியதனால் அவர் வள்ளியூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் CC 414/2021 என்ற வழக்கை என்னுடைய தம்பிக்கு எதிராக தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அது பொய் வழக்கு, மாண்புமிகு உச்சநீதிமன்றம் அந்த வழககிற்கு தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. அந்த உத்தரவை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

7. 1,2,3 எதிர்மனுதாரர்கள் என்னையும், குழந்தையும் 1 ஆவது எதிர்மனுதாரர் வீட்டிற்கு வாழ வரச்சொல்லி அழைத்தார்கள் என்றால் இல்லை. குழந்தை பிறந்தபோது எதிர்மனுதாரர்கள் குழந்தையை பார்க்க வந்தார்களா என்றால் இல்லை. நான் 1,2,3 எதிர்மனுதாரர்களிடம் என்னுடைய அப்பா பணம் கேட்டதால் அவர்கள் அவர்களுடைய நிலத்தை திசையன்விளை சேர்ந்த ADJ Xerox உரிமையாளரிடம் அடகு வைத்து ரூ.25 லட்சம் பணம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. ADJ Xerox உரிமையாளரிடம் எனது அப்பா 2 மாதம் வட்டி கட்டினார் என்றால் இல்லை. வட்டி கட்ட முடியவில்லை என்று ஊரை காலிசெய்துவிட்டு நான் சென்றேனா என்றால் இல்லை.

(எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**மறுவிசாரணை** : இல்லை

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.11.21 15:24:49 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.11.21 15:24:55 +0530

Judicial Magistrate, Sathankulam.